# தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட, மாநகர, மாநில

## அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் கூட்டம்.

**(12–1–2016)**

தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் கூட்டம் 12.1.2016 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் சென்னை, தியாகராயர் நகர், ஜி.என்.செட்டி சாலையில் உள்ள அகார்டு ஓட்டலில், கழகப் பொருளாளரும் – இளைஞர் அணிச் செயலாளருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், இணைச் செயலாளர் மு.பெ.சாமிநாதன், துணைச் செயலாளர்கள் ஆர்.டி.சேகர், சுபா.சந்திரசேகர், ப.தாயகம் கவி, அசன் முகமது ஜின்னா, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பைந்தமிழ் பாரி, எஸ்.ஜோயல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

***இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு :–***

## தீர்மானம் : 1

தமிழ்ப் பெருமக்கள் உவகையுடன் கொண்டாடி மகிழும் தனிப்பெரும் விழா தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் விழா!

இவ்விழாவினையொட்டி இளைஞர் அணியின் சார்பில் தமிழகம் முழுவதும், இளைஞர்கள் – மாணவர்கள் – மகளிர் – சிறுவர் – முதியோர் என அனைத்துத் தரப்பினரும் பங்கேற்கின்ற வகையில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும்

பேரூர் அளவில் நடத்தி, முறையாக தேர்வுசெய்யப்படுபவர்களுக்கு உரிய பரிசுகளை வழங்கிடுவதோடு,

ஏழை, எளிய, நடுத்தர மக்கள் பயன் பெறத்தக்க வகையில், கழக முன்னோடிகளைக் கொண்டு, நலத்திட்ட உதவிகளையும் ஆங்காங்கே வழங்கி சிறப்பித்திட வேண்டுமென மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் பகுதி இளைஞர் அணி அமைப்புக்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் : 2**

தமிழக கிராமங்களில் எல்லாம் இளைஞர்கள் பங்கேற்கும் பாரம்பரிய வீரவிளையாட்டுகளில் ஒன்றான “ஜல்லிக்கட்டு” பல ஆண்டு காலமாக, தமிழகத்தில் சிறப்பாக நடைபெற்று வந்த நிலையில், கடந்த ஆண்டு போட்டிகளை நடத்திட உச்சநீதிமன்றம் தடை விதித்தது.

நிர்வாகத் திறனற்ற ஜெயலலிதா அரசு, எல்லாவற்றைப் போல இந்தப் பிரச்சினையிலும் அக்கறை காட்டாமல், முன்கூட்டியே அதற்கான முயற்சிகளை எடுத்து உச்சநீதிமன்றத்தில் முறையான அனுமதியைப் பெற தவறிவிட்டது.

தலைவர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து ஓராண்டு காலமாக எடுத்து வந்த பெரும் முயற்சியினால் இந்த ஆண்டு “ஜல்லிக்கட்டு” நடைபெற முறையான அனுமதியை மத்திய அரசு வழங்கியுள்ளது.

தமிழக இளைஞர்களின் வீரவிளையாட்டான “ஜல்லிக்கட்டு” தொடர்ந்து நடைபெற பெருமுயற்சி மேற்கொண்ட தலைவர் கலைஞர் அவர்களுக்கும், அனுமதி வழங்கிய மத்திய அரசுக்கும் இக்கூட்டம் தமது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் : 3**

திமுக. இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல் – புதுப்பித்தல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தி.மு.க. இளைஞர் அணியில் உறுப்பினர்களாக சேர்ந்திட, தாமாகவே இளைஞர்கள் ஆர்வங்கொண்டு தலைமைக்கு நேரடியாக தொடர்புகொண்டு வருகின்றனர்.

எனவே, அவர்களை தி.மு.க. இளைஞர் அணியில் உறுப்பினராக சேர்த்திடும் வகையில், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக ஊராட்சிகள், வார்டுகள், வட்டங்கள் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல் முகாம்களை அமைத்து, இளைஞர்களை, பெருமளவில் உறுப்பினர்களாக பதிவு செய்து, உடனுக்குடன் அவர்களுக்கு இளைஞர் அணி உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களைப் பெற்று, தாமதமின்றி வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்வதோடு;

புதிய உறுப்பினர்களை தலைமையில் பதிவு செய்து அவர்களுக்கான உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களைப் பெற்றுச் சென்றுள்ள மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் முறையாக இன்னமும் ஒப்படைக்கா திருப்பின் அவற்றை உடனடியாக வழங்கிட வேண்டுமெனவும், இளைஞர் அணியின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் : 4**

தமிழகத்தில் நடைபெற்று வரும் ஜெயலலிதா ஆட்சியில் எங்கும் ஊழல், எதிலும் ஊழல், நிவாரணப் பணிகளிலும் முறைகேடு – ஊழல் என அனைத்துத் துறைகளிலும் ஊழல் பெருக்கெடுத்து ஓடுகிறது.

மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசிய பொருட்களின் விலையோ, நாளுக்குநாள் உயர்ந்து கொண்டேபோகிறது.

எப்பக்கம் நோக்கினும் கொலை, கொள்ளை, வழிப்பறி – கற்பழிப்பு என சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது.

அறிவிக்கப்படாத மின்வெட்டு தொடர்வதால் விவசாயம் மற்றும் சிறு–குறு தொழில்களும், தொழிற்சாலைகளும் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

தமிழக மக்களின் மனதில் மறக்க முடியாத ஆழமான வடுக்களை ஏற்படுத்தியுள்ள மழைவெள்ளத்தினாலும் ஜெயலலிதா அரசின் தவறானசெயல்பாட்டினாலும் ஏற்பட்ட அபாயத்தில் சிக்கி பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிருக்கு போராடிய நேரத்தில் கூட, அவர்களை காப்பாற்றிட எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்திக் கொள்ளாத அ.தி.மு.க. அரசின் செயலற்ற தன்மையை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதோடு;

கடந்த நான்கு ஆண்டுகளாக ஜெயலலிதா ஆட்சியில் நடைபெற்று வரும் முறைகேடுகளையும், ஊழல்களையும், நிர்வாகச் சீர்கேடு – சட்டம்,ஒழுங்கு சீர்குலைவு – விலை உயர்வு உள்ளிட்ட மக்கள் விரோதப் போக்கினையும் பட்டியலிட்டு, அதனை எளிய முறையில் அச்சிட்டு, கிராமங்கள், குக்கிராமங்கள் – நகரங்கள் – மாநகரங்கள், வார்டுகள், வட்டங்கள் என மூலை முடுக்குகளிலெல்லாம் வசிக்கும் மக்களிடம் திமுக இளைஞர் அணி சார்பில் கொண்டு சேர்த்திடும் வகையில், வீதிகள்தோறும் வீட்டுக்கு வீடு சென்றமர்ந்து, திண்ணைப் பிரச்சாரத்தை **2016 பிப்ரவரி 1 முதல் 29ஆம் தேதி** வரையிலான ஒரு மாத காலத்திற்கு மேற்கொள்ள வேண்டும்.

அதற்கான அனைத்து முயற்சிகளிலும் மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய பகுதி மற்றும் பேரூர் இளைஞர் அணி அமைப்புக்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

*****